# ESIC invites applications for MBBS seats under insured person quota

TIMES NEWS NETWORK

**Salem:** The Employees' State Insurance Corporation (ESIC) has invited applications from the eligible candidates, who appeared for the National Eligibility cum Entrance Test this year, for MBBS and BDS seats under the insured person quota (IP quota) in the medical colleges managed by it.

Siva Ramakrishnan, director, sub-regional office, ESIC, Salem, said the children of people insured by the ESIC were entitled to the admission under the IP quota. "Employees insured under the ESI scheme as on September 30, 2022, could avail the benefit of IP quota for their children."

Under the quota, he said, candidates would be allocated seats on the basis of merit and preference for their institution.

The merit list would be prepared based on the all-India rank list, consistent with the reservation policy of the Union government for preparation of category-wise inter-se merit list. Candidates would be allotted seats through the centralized online counselling by the directorate general of health services.

The tuition fee payable for MBBS would be Rs24,000 per annum. No need to pay any capitation fees.

A total of 437 MBBS and 28 BDS seats are allocated to the children of people insured by the ESIC. Of these, 45 MBBS seats are in Tamil Nadu - 25 with the ESIC medical college at KK Nagar in Chennai and another 20 with the government medical college in Coimbatore.

Eligible candidates may apply online using the link provided on the ESIC website - www.esic.gov.in - that was activated from May 4.

The last date for submitting applications is May 17. For details, refer to the admission notice of ESIC medical education cell dated May 2.

# இ.எஸ்.ஐ.சி. மருத்துவக்கல்லூரிகளில்

# மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்

## இயக்குனர் தகவல்

சேலம், மே.7-

தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழக சேலம் துணை மண்டல அலுவலக இயக்குனர் (பொறுப்பு) சிவராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழகத்தால் நிர்வகிக்கப்படும் மருத்துவக்கல்லூரிகளில் இ.எஸ்.ஐ. காப்பீடு செய்யப்பட்ட நபர்களின் ஒதுக்கீட்டின் கீழ் எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ் இடங்களை நிரப்ப நீட்-2023 தேர்வு எழுதிய தகுதியான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இ.எஸ்.ஐ. காப்பீடு செய்தவர்களின் குழந்தைகள் இந்த ஒதுக்கீட்டின் கீழ் சேர தகுதியுடையவர்கள் ஆவர். 30.9.2022 நிலவரப்படி இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் காப்பீடு செய்துள்ள தொழிலாளர்கள் மட்டும் தங்கள் குழந்தைகளுக்கான மருத்துவ இடங்களில் ஐ.பி. ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

ஐ.பி.கோட்டாவின் கீழ் விண்ணப்பதாரர்களுக்கு தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும். மத்திய அரசின் இட ஒதுக்கீடு கொள்ளைக்கு ஏற்ப 2023 நீட் தேர்வில் தகுதியான மாணவர்களின் அகில இந்திய தரவரிசை அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படும். சுகாதார சேவைகள் இயக்குனரகத்தால் நடத்தப்படும் ஆன்லைன் கலந்தாய்வு மூலம் மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படும். எம்.பி.பி.எஸ். படிப்புக்கு ஆண்டுக்கு ரூ.24 ஆயிரம் கட்டணமாகும். ஐ.பி.கோட்டாவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் எந்தவிதமான கேபிடேஷன் கட்டணமும் செலுத்த தேவையில்லை.

437 எம்.பி.பி.எஸ். மற்றும் 28 பி.டி.எஸ். இடங்கள் (தமிழகத்தில் 45 எம்.பி.பி.எஸ். இடங்கள்) உள்ளன. அதில், 25 இடங்கள் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக மருத்துவக்கல்லூரி, கே.கே.நகர், சென்னையில் உள்ளது. 20 இடங்கள் அரசு மருத்துவக்கல்லூரி, கோவையில் உள்ளது. தகுதியான விண்ணப்பதாரர்கள் இ.எஸ்.ஐ.சி. வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பயன்படுத்தி ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி வருகிற 17-ந்தேதி இரவு 11.59 மணி ஆகும். இ.எஸ்.ஐ.சி. இணையதளமான www.esic.gov.in-ல் வழங்கப்படும் லிங்க் மூலம் ஆன்லைன் முறையில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப நகலை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.